DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.84/2018

**prosecution witness: LW-5 as PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தொழில் | : | யாத்திரை பணியாளர் |
| த/பெ. | : | செல்லம் | வயது | : | 36 |
| ஊர் | : | இராமேஸ்வரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>29.01.2026</u>

(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது இராமேஸ்வரத்தில் குடியிருந்து யாத்திரை பணியாளர் வேலை செய்து வருகிறேன். நான் 8 வது படித்துள்ளேன். எனக்கு இந்தி பேச தெரியும் மற்றும் மொழி பெயர்க்கத் தெரியும். வழக்கு விபத்தில் காயமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர்கள். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் மனைவி என்னிடம் உங்களுக்கு இந்தி தெரியுமா என்று இந்தியில் கேட்டார்கள். அப்போது நான் கோவிலுக்கு வெளியே இருந்தேன். அப்போது காலை சுமார் 10.00 மணி இருக்கும். நான் அவரிடம் இந்தி தெரியும் என கூறினேன். அதனால் அவர் என்னிடம் நானும் எனது வீட்டுக்காரரும் நடந்து வந்து கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டுவிட்டது என சொன்னார்கள். எந்த இடம் என்று தற்போது எனக்கு தெரியவில்லை. விபத்தில் இறந்துபோன பெண்ணின் கணவருக்கு இராமேஸ்வரம் ஜி.எச்.ல் பிரேத பரிசோதனைக்கு உதவி செய்தேன். பின்னர் இராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு மொழி பெயர்ப்பாளராக இருந்து உதவி செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் பாதிக்கப்பட்டவர் சொல்லித்தான் எனக்கு விபரம் தெரியும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.01.29 11:02:34 +0530